
## *சாராம்சம்*

# ஊழல் மோசடிகளுக்கு எதிரான போராட்டத்திற்க்கு வழிசமைக்கும்

## ஊழலிற்கெதிரான ஐ.நாவின் மாநாட்டு பிரகடனம் புற்றுநோய் போன்ற அச்சுறுத்தல்

# ஐ.நா.பிரகடனத்தை சீர்குலைக்கும் வெறும் சொல்லாட்சி

*கூகுள் புத்தகங்கள்:* [**United Nations Convention Against Corruption - Mere 'Rhetoric' to Combat Fraud and Corruption, only subverts United Nations Convention**]




***அளவு - 8.25" X 11" – பக்கங்கள் 532***

*இந்த புத்தகத்தில், நூலாசிரியர், ஏழை மக்களின் பெறுமதியான வளங்களை அவர்களது பலம் மிக்க ஆட்சியாளர்கள், அந்த வளங்களின் காப்பாளர்கள் என்பதற்கு முரணான வகையில் செயற்பட்டு அந்த வளங்களை எவ்வாறு வெட்கமின்றி சுரண்டி, சூறையாடி கொள்ளையிட்டார்கள் என்பதனை வெளிக்கொண்டு வந்துள்ளார், இது நடைமுறை உலகில் ஒரு சாதாரண விடயமாவுள்ளதுடன் ஒரு புற்று நோயாகவும் வளர்ந்து வருகின்றது.*


*இப்புத்தகமானது* 2005*ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைமுறைக்கு வந்த ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான மாநாட்டினை மையமாக கொண்டு எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் மிக வலுவாக, உலகம் முழுதும் பரவி வரும் ஐந்தே புற்றுநோய் தொடர்பில், வெறும் சொற் தொடர்களும், ஆபத்தான அறிவுரைகளும் குற்றச்சாட்டுகளும் ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான மாநாட்டிற்கு முரணாதாக அமையும் என வாதாடுகிறார்.*

*ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான மாநாட்டினை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனில், உலக தலைவர்கள் உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என இப்புத்தகத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது: மேலதிகமாக உலகம் முழுவதும் பரவி வரும் ஊழல் மோசடி என்னும் இந்த புற்றுநோய் தொடர்பில் நூலாசிரியர் மிக ஆழமாக ஆராய்ந்துள்ளார்.*

*நூலாசிரியர் ஐ.நா. ஊழலுக்கெதிரான மாநாட்டின் ஆதியிலிருந்து, இதனை உருவாக்குவதற்காக இடம்பெற்ற ஆரம்ப கூட்டங்களிலிருந்து அதனை உருவாக்கிய வரலாறு, மற்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இதனை அமுலுக்கு கொண்டு வந்தது முதல் விபரமாக விளக்கியுள்ளார், இது ஊழல் மற்றும் மோசடிக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு தேவையான அறிவையும் ஐ.நா. ஊழலுக்கெதிரான மாநாட்டின் உருவாக்கம் தொடர்பிலும் விலைமதிக்க முடியாத உள்ளடக்கங்களையும் கொண்டுள்ளது.*

ஐ நா ஊழலுக்கெதிரான மாநாடானது 1970 ல் ஜப்பானின் கியோட்டோ நகரில் இடம்பெற்ற ஐ.நா.மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கை வரையிலான வரலாற்றை கொண்டது, அதன் அடிப்படையில் 2000 ம் ஆண்டு டிசம்பர் இடம்பெற்ற ஐ.நா. பொது மாநாட்டில் ஊழலுக்கெதிராக ஐ.நா. மாநாட்டினை உருவாக்கும்படி ஒரு குழுவை அமைக்கும் முகமாக பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து பல்வேறு சுற்று பேரம்பேசல் மற்றும் கலந்துரையாடல்களை தொடர்ந்து 2003ம் ஆண்டு அக்டோபர் ஐக்கிய நாடுகளின் பொது சபையில், ஊழலுக்கெதிரான ஐ.நா. மாநாடு ஏற்றுக்கொள்ளப்பட்டு டிசம்பர் 9ம் திகதியை சர்வதேச ஊழலுக்கெதிரான தினமாக பிரகடனப்படுத்தியது.




அப்போதைய ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் அவர்கள் பல்வேறு விடயங்கள் அடங்கலாக 2004ல் வெளியிட்ட ஐ.நா.வின் ஊழலுக்கெதிரான மாநாடு தொடர்பிலான அறிக்கையில் பின்வரும் காரியங்களை கூறியிருந்தார்:


> "ஊழல் என்பது சமூகத்தை அரிக்கும் காரியங்களை கொண்ட ஒரு நயவஞ்சகமான தகடாகும். இது ஜனநாயகம் மற்றும் சட்டம் ஒழுங்கு என்பவற்றை குறைத்து மதிப்பிட்டு, மனித உரிமை மீறல்களுக்கும் சந்தைகளை சிதைப்பதற்கும் மேலும் வாழ்க்கை தரத்தினை சீரழிப்பதாகவும், மற்றும் மனித பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் ஒழுங்கு செய்யப்பட்ட குற்றங்கள், மற்றும் தீவிரவாதத்தினையும் அனுமதிப்பதாகவும் அமைகிறது.
>
> இந்த தீமையான காரியம் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது- பெரிய சிறிய, ஏழ்மையான செல்வந்தமான, அனைத்து இடங்களிலும் காணப்படுவதோடு, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே இதன் அழிவிற்குள்ளாக்கும் தாக்கங்கள் காணப்படுகின்றன. ஊழலானது அபிவிருத்திக்கு வரும் நிதியினை திசை திருப்புவதன் மூலமும்,அரசாங்கம் ஒன்று வழங்க வேண்டிய அடிப்படை சேவைகளை கீழிறக்குவதாகவும்,சமத்துவமின்மையையும், அநீதியையையும் ஊக்குவிப்பதாகவும்,வெளிநாட்டு உதவியையும் முதலீட்டையும் ஊக்குவிக்காத ஒன்றாகவும் ஏழை மக்களை சமத்துவமற்றமுறையில் பாதிப்பதாகவும் இருக்கின்றது. அபிவிருத்தி மந்தமான முறையில் இடம்பெறுவதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் அபிவிருத்திக்குமான மிக பிரதானமான காரியமாக ஊழல் இருக்கின்றது."

டிசம்பர் 2005ல் நடைமுறைக்கு வந்த ஐ.நா.வின் ஊழலிற்கு எதிரான மாநாட்டினை 30 நாடுகள் நடைமுறைபடுத்துவதற்கு அர்ப்பணித்து ஒப்புதல் வழங்கியிருந்தன. எவ்வாறெனினும் இந்த புத்தக தொடர்களிலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நூலாசிரியர் ஐ நாவின் ஊழலிற்கெதிரான மாநாடு 2005ல் நடைமுறைக்கு வருவதற்கு முன்னமே 1990ன் ஆரம்பகாலம் முதற்கொண்டு, ஊழலிற்கெதிரான செயற்பாட்டாளராக காணப்பட்டார்.

ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டிற்கு 31.3.2004ல் ஒப்புதல் அளித்ததன் மூலம் இலங்கை இதற்கு உடன்பட்ட இரண்டாவது நாடாக இருந்தமை முக்கிய அம்சமாகும். ஆனால் இது வெறும் ஒப்புதலோடு நின்றதுமன்றி, ஐ. நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் சரத்துகளுக்கு அமைய நோக்கின் இலங்கையில் ஊழலுக்கெதிராக செயற்படுவதற்கான எந்தவொரு உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படிருக்கவில்லை, ஊழல் மோசடிக்கு எதிராக செயற்படும் சட்டரீதியான அமைப்பு தொடர்பில் இடைவெளி காணப்பட்டதுடன்,உண்மையில் ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்கான முயற்சிகள் அரசியல் மற்றும் சமூக செல்வாக்குகளை பயன்படுத்தி அழுத்தங்கள் மூலம் இடம்பெற்றதும்,அதற்கு சட்ட ரீதியான அமைப்புகளும் அதிகாரங்களும் கவலைக்கிடமாக உடந்தையாக இருந்தன.

செப்டம்பர் 2016ன் படியான, ஐ.நா. ஊழலிற்கெதிரான மாநாட்டின் செயலகமான ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான *(UNODC)* அலுவலகம் வெளியிட்ட கீழ்வரும் அறிக்கையின்படி, கையொப்பம் இட்ட அனைத்து நாடுகளும் ஊழலிற்கெதிரான ஐ நாவின் மாநாட்டின் பங்காளிகளாக இருந்தனர்.

## UNCAC கையொப்பங்களும் ஒப்புதல் நிலவரமும்




States Parties
Signatories
Countries that have not signed or ratified the UNCAC

**Signatories: 140**
**Parties: 180**

| நாடு | ஒப்பம் | ஒப்புதல் அளித்தல், ஏற்றுக்கொள்ளல் (A), அனுமதி (AA), இணக்கம் பெறல்(a), அடுத்தடுத்து (d) |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 20.2.2004 | 25.8.2008 |
| அல்பேனியா | 18.12.2003 | 25.5.2006 |
| அல்ஜீரியா | 9.12.2003 | 25.8.2004 |
| அங்கோலா | 10.12.2003 | 29.8.2006 |
| அன்டிகுவா மற்றும் பார்புடா | | 21.6.2006 a |
| அர்ஜென்டினா | 10.12.2003 | 28.8.2006 |
| அர்மேனியா | 19.5.2005 | 8.3.2007 |
| அவுஸ்திரேலியா | 9.12.2003 | 7.12.2005 |
| ஆஸ்திரியா | 10.12.2003 | 11.1.2006 |
| அஸிர்பைஜான் | 27.2.2004 | 1.11.2005 |
| பஹாமாஸ் | | 10.1.2008 a |
| பஹ்ரைன் | 8.2.2005 | 5.10.2010 |
| பங்களாதேஷ் | | 27.2.2007 a |
| பார்படோஸ் | 10.12.2003 | |
| பெலாரஸ் | 28.12.2004 | 17.2.2005 |
| பெல்ஜியம் | 10.12.2003 | 25.9.2008 |
| பெனின் | 10.12.2003 | 14.10.2004 |
| பூட்டான் | 15.9.2005 | 21.9.2016 |
| பொலிவியா | 9.12.2003 | 5.12.2005 |
| போஸ்னியா மற்றும்,ஹெசகோவினா | 16.9.2005 | 26.10.2006 |
| போட்ஸ்வானா | | 27.6.2011 a |
| பிரேசில் | 9.12.2003 | 15.6.2005 |
| ப்ருனே தாருஸலாம் | 11.12.2003 | 2.12.2008 |
| பல்கேரியா | 10.12.2003 | 20.9.2006 |
| பர்கினா பாசோ | 10.12.2003 | 10.10.2006 |
| புருண்டி | | 10.3.2006 a |
| காபோ வெர்டே | 9.12.2003 | 23.4.2008 |
| கம்போடியா | | 5.9.2007 a |
| கேமரூன் | 10.12.2003 | 6.2.2006 |
| கனடா | 21.5.2004 | 2.10.2007 |
| மத்திய ஆபிரிக்க குடியரசு | 11.2.2004 | 6.10.2006 |
| சில்லி | 11.12.2003 | 13.9.2006 |
| சீனா | 10.12.2003 | 13.1.2006 |
| கொலம்பியா | 10.12.2003 | 27.10.2006 |
| கொமொரோஸ் | 10.12.2003 | 11.10.2012 |
| காங்கோ | | 13.7.2006 a |
| குக் தீவுகள் | | 17.10.2011 |
| கோஸ்டா ரிக்கா | 10.12.2003 | 21.3.2007 |
| கோடே டி இவொயிரே | 10.12.2003 | 25.10.2012 |

| | | |
|---|---|---|
| க்ரோவோஷியா | 10.12.2003 | 24.4.2005 |
| கியூபா | 9.12.2005 | 9.2.2007 |
| சைப்ரஸ் | 9.12.2003 | 23.2.2009 |
| செக் குடியரசு | 22.4.2005 | 29.11.2013 |
| காங்கோ ஜனநாயக குடியரசு | | 23.9.2010 a |
| டென்மார்க் [2] | 10.12.2003 | 26.12.2006 |
| டிஜிபோட்டி | 17.6.2004 | 20.4.2005 |
| டொமினிக்கா | | 28.5.2010 a |
| டொமினிக்கன் குடியரசு | 10.12.2003 | 26.10.2006 |
| எக்குவடோர் | 10.12.2003 | 15.9.2005 |
| எகிப்து | 9.12.2003 | 25.2.2005 |
| எல் சல்வடோர் | 10.12.2003 | 1.7.2004 |
| எஸ்டோனியா | | 12.4.2010 a |
| எத்தியோப்பிய | 10.12.2003 | 26.11.2007 |
| ஐரோப்பிய ஒன்றியம் | 15.9.2005 | 12.11.2008 AA |
| பிஜி | | 14.5.2008 a |
| பின்லாந்து | 9.12.2003 | 20.6.2006 A |
| பிரான்ஸ் | 9.12.2003 | 11.7.2005 |
| காபோன் | 10.12.2003 | 1.10.2007 |
| காம்பியா | | 8.7.2015 a |
| ஜோர்ஜியா | | 4.11.2008 a |
| ஜெர்மனி | 9.12.2003 | 12.11.2014 |
| கானா | 9.12.2004 | 27.6.2007 |
| கிரீஸ் | 10.12.2003 | 17.9.2008 |
| கிரெனேடா | | 1.4.2015 a |
| கெளதமாலா | 9.12.2003 | 3.11.2006 |
| கினி | 15.7.2005 | 29.5.2013 |
| கினி -பிசாவு | | 10.9.2007 a |
| குயானா | | 16.4.2008 a |
| ஹெய்டி | 10.12.2003 | 14.9.2009 |
| ஹோலி சி | | 19.9.2016 a |
| ஹொண்டர்ஸ் | 17.5.2004 | 23.5.2005 |
| ஹங்கேரி | 10.12.2003 | 19.4.2005 |
| ஐஸ்லாந்து | | 1.3.2011 a |
| இந்தியா | 9.12.2005 | 9.5.2011 |
| இந்தோனேசியா | 18.12.2003 | 19.9.2006 |
| ஈரான் (இஸ்லாமிய குடியரசு) | 9.12.2003 | 20.4.2009 |
| ஈராக் | | 17.3.2008 a |
| அயர்லாந்து | 9.12.2003 | 09.11.2011 |
| இஸ்ரேல் | 29.11.2005 | 4.2.2009 |
| இத்தாலி | 9.12.2003 | 5.10.2009 |
| ஜமைக்கா | 16.9.2005 | 5.3.2008 |

| | | |
|---|---|---|
| ஜப்பான் | 9.12.2003 | |
| ஜோர்தான் | 9.12.2003 | 24.2.2005 |
| கசகஸ்தான் | | 18.6.2008 a |
| கென்யா | 9.12.2003 | 9.12.2003 |
| கிரிபட்டி | | 27.9.2013 a |
| குவைத் | 9.12.2003 | 16.2.2007 |
| கிர்கிஸ்தான் | 10.12.2003 | 16.9.2005 |
| லாவோ ஜனநாயக மக்கள் குடியரசு | 10.12.2003 | 25.9.2009 |
| லத்வியா | 19.5.2005 | 4.1.2006 |
| லெபனான் | | 22.4.2009 a |
| லெசோதோ | 16.9.2005 | 16.9.2005 |
| லைபீரியா | | 16.9.2005 a |
| லிபியா | 23.12.2003 | 7.1.2005 |
| லைச்டென்ஸ்டைன் | 10.12.2003 | 8.7.2010 |
| லிதுவேனியா | 10.12.2003 | 21.12.2006 |
| லக்சம்பர்க் | 10.12.2003 | 6.11.2007 |
| மடகாஸ்கர் | 10.12.2003 | 22.9.2004 |
| மலாவி | 21.9.2004 | 4.12.2007 |
| மலேசியா | 9.12.2003 | 24.9.2008 |
| மாலைதீவு | | 22.3.2007 a |
| மாலி | 9.12.2003 | 18.4.2008 |
| மோல்ட்டா | 12.5.2005 | 11.4.2008 |
| மார்ஷல் தீவுகள் | | 17.11.2011 |
| மொரிசியானா | | 25.10.2006 a |
| மொரிசியஸ் | 9.12.2003 | 15.12.2004 |
| மெக்சிகோ | 9.12.2003 | 20.7.2004 |
| மைக்ரோனேசியா | | 21.3.2012 a |
| மோல்டோவா | 28.9.2004 | 1.10.2007 |
| மொங்கோலியா | 29.4.2005 | 11.1.2006 |
| மொண்டேனோகுரோவ் | | 23.10.2006 d |
| மொரோக்கோ | 9.12.2003 | 9.5.2007 |
| மொசாம்பிக் | 25.5.2004 | 9.4.2008 |
| மியன்மார் | 2.12.2005 | 20.12.2012 |
| நமீபியா | 9.12.2003 | 3.8.2004 |
| நாவுறு | | 12.7.2012 a |
| நேபால் | 10.12.2003 | 31.3.2011 |
| நெதர்லாந்து | 10.12.2003 | 31.10.2006 A |
| நியூசிலாந்து | 10.12.2003 | 1.12.2015 |
| நிக்கராகுவா | 10.12.2003 | 15.2.2006 |
| நைஜர் | | 11.8.2008 a |
| நைஜீரியா | 9.12. 2003 | 14.12.2004 |
| நோர்வே | 9.12.2003 | 29.6.2006 |

| | | |
|---|---|---|
| ஓமான் | | 9.1.2014 |
| பாகிஸ்தான் | 9.12.2003 | 31.8.2007 |
| பாலவு | | 24.3.2009 a |
| பனாமா | 10.12.2003 | 23.9.2005 |
| பப்புவா நியூ கினி | 22.12.2004 | 16.7.2007 |
| பராகுவே | 9.12.2003 | 1.6.2005 |
| பெரு | 10.12.2003 | 16.11.2004 |
| பிலிப்பீன்ஸ் | 9.12.2003 | 8.11.2006 |
| போலாந்து | 10.12.2003 | 15.9.2006 |
| போர்த்துக்கல் | 11.12.2003 | 28.9.2007 |
| கட்டார் | 1.12.2005 | 30.1.2007 |
| கொரிய குடியரசு | 10.12.2003 | 27.3.2008 |
| ரொமேனியா | 9.12.2003 | 2.11.2004 |
| ரஷ்யா | 9.12.2003 | 9.5.2006 |
| ருவாண்டா | 30.11.2004 | 4.10.2006 |
| செண்ட்லுஸ்சியா | | 25.11.2011 |
| சவோ டோமே மற்றும் ப்ரின்சிபி | 8.12.2005 | 12.4.2006 |
| சவூதி அரேபியா | 9.1.2004 | 29.4.2013 |
| செனெகல் | 9.12.2003 | 16.11.2005 |
| செர்பியா | 11.12.2003 | 20.12.2005 |
| சீசெல்ல்ஸ் | 27.2.2004 | 16.3.2006 |
| சிரிலியோனே | 9.12.2003 | 30.9.2004 |
| சிங்கப்பூர் | 11.11.2005 | 06.11.2009 |
| ஸ்லோவாகிய | 9.12.2003 | 1.6.2006 |
| ஸ்லோவேனியா | | 1.4.2008 a |
| சாலமன் தீவுகள் | | 6.1.2012 a |
| தென் ஆபிரிக்கா | 9.12.2003 | 22.11.2004 |
| தென் சூடான் | | 23.1.2015 a |
| ஸ்பெயின் | 16.9.2005 | 19.6.2006 |
| இலங்கை | 15.3.2004 | 31.3.2004 |
| பலஸ்தீன தேசம் | | 2.4.2014 a |
| சூடான் | 14.1.2005 | 5.9.2014 |
| சுவாசிலாந்து | 15.9.2005 | 24.9.2012 |
| ஸ்வீடன் | 9.12.2003 | 25.9.2007 |
| ஸ்விசர்லாந்து | 10.12.2003 | 24.9.2009 |
| சிரிய அராபிய குடியரசு | 9.12.2003 | |
| தஜிகிஸ்தான் | | 25.9.2006 a |
| தாய்லாந்து | 9.12.2003 | 1.3.2011 |
| முன்னாள் யூகோஸ்லாவியா மாசிதோனியா குடியரசு | 18.8.2005 | 13.4.2007 |
| திமோர் - லெஸ்டெ | 10.12.2003 | 27.3.2009 |
| டோகோ | 10.12.2003 | 6.7.2005 |
| தரினிடன்ட் மற்றும் டொபாகோ | 11.12.2003 | 31.5.2006 |

| | | |
|---|---|---|
| துனிசியா | 30.3.2004 | 23.9.2008 |
| துருக்கி | 10.12.2003 | 9.11.2006 |
| துர்க்மெனிஸ்தான் | | 28.3.2005 a |
| துவாலு | | 04.9.2015 a |
| உகாண்டா | 9.12.2003 | 9.9.2004 |
| உக்ரைன் | 11.12.2003 | 02.12.2009 |
| ஐக்கிய அரேபிய இராஜ்யம் | 10.8.2005 | 22.2.2006 |
| பிரித்தானிய இராஜ்ஜியமும் வட அயர்லாந்தும் | 9.12.2003 | 9.2.2006 |
| தான்சானியா ஐக்கிய குடியரசு | 9.12.2003 | 25.5.2005 |
| ஐக்கிய அமெரிக்கா | 9.12.2003 | 30.10.2006 |
| உருகுவே | 9.12.2003 | 10.1.2007 |
| உஸ்பெகிஸ்தான் | | 29.7.2008 a |
| வனவாட்டு | | 12.7.2011 a |
| வெனிசுயேலா (போலிவேரின் குடியரசு) | 10.12.2003 | 2.2.2009 |
| வியட்னாம் | 10.12.2003 | 19.8.2009 |
| யேமென் | 11.12.2003 | 7.11.2005 |
| சாம்பியா | 11.12.2003 | 7.12.2007 |
| சிம்பாபே | 20.2.2004 | 8.3.2007 |

நூலாசிரியர் ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டினை குறித்து போதிய அறிவினை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த நூலில் விபரமாக ஆராய்ந்துள்ளார். ஐ நாவின் ஊழலிற்கெதிரான மாநாடானது பொது மக்களின் வளங்களையும் நிதியையும் முகாமைத்துவம் செய்யும் அரச துறைக்கு மட்டுமல்லாது, அதே உந்துதலுடன் பொது மக்களின் வளங்களையும் நிதியினையும் முகாமைத்துவம் செய்யும் தனியார் துறைக்கும் அமுல் செய்யப்பட வேண்டிய ஒன்றாக காணப்பட்டது. அதற்கமைய ஐ நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் சரத்துகளுக்கு அரச துறை மட்டுமல்லாது தனியார் துறையும் கட்டுப்பட்டிருந்ததுடன், இலங்கை அரசாங்கமானது ஐ நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் சரத்துகளையும் உள்ளடக்கங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு கடப்பட்டிருந்தது. ஊழலிற்கெதிரான ஐ.நா மாநாட்டின் சரத்துக்கள் அறிவினை பெற்றுக்கொள்ளும் வகையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **முன்னுரை**

2. **பாகம் I - பொது ஏற்பாடு**

| | |
|---|---|
| சரத்து 1 | நோக்க கூற்று |
| சரத்து 2 | விதிமுறையின் பாவனை |
| சரத்து 3 | செயற்பாட்டின் நோக்கம் |
| சரத்து 4 | இறைமையின் பாதுகாப்பு |

3. **பாகம் II - தடுப்பு அளவீடுகள்**

| | |
|---|---|
| சரத்து 5 | ஊழல் தடுப்பு கொள்கை மற்றும் நடைமுறைகள் தடுப்பு |
| சரத்து 6 | ஊழல் தடுப்பு அங்கம்/அங்கங்கள் |
| சரத்து 7 | அரச துறை துறை |
| சரத்து 8 | அரச ஊழியர்களுக்கான தொழில் நெறிமுறைகள் |

| | |
|---|---|
| சரத்து 9 | அரச கொள்வனவும் அரச நிதி முகாமைத்துவமும் |
| சரத்து 10 | அரச அறிக்கையிடுதல் |
| சரத்து 11 | நீதித்துறை மற்றும் வழக்காடல் சேவைகள் தொடர்பிலான அளவீடுகள் |
| சரத்து 12 | தனியார் துறை |
| சரத்து 13 | சமூக பங்குபற்றுதல் |
| சரத்து 14 | நிதி மோசடியை தவிர்ப்பதற்கான அளவீடுகள் |

**4. பாகம் 3 குற்றமாகுதலும் சட்ட நடைமுறைப்படுத்தலும்**

| | |
|---|---|
| சரத்து 15 | தேசிய அரச ஊழியர்களின் இலஞ்சம் |
| சரத்து 16 | வெளிநாட்டு அரச ஊழியர்களதும், சர்வதேச பொது ஊழியர்களதும் இலஞ்சம் |
| சரத்து 17 | அரச ஊழியரினால் சொத்து  தொடர்பிலான மோசடி, ஒவ்வாத பயன்பாடு வேறு வகையிலான மாற்றங்கள் |
| சரத்து 18 | செல்வாக்கை பயன்படுத்தி வர்த்தகம் |
| சரத்து 19 | செயற்பாடுகளை துஸ்பிரயோகம் செய்தல் |
| சரத்து 20 | சட்டவிரோத செறிவூட்டல் |
| சரத்து 21 | தனியார் துறையில் இலஞ்சம் |
| சரத்து 22 | தனியார் துறையில் சொத்து  தொடர்பிலான மோசடி |
| சரத்து 23 | குற்றத்தை நோக்கிய நிதிமோசடி |
| சரத்து 24 | மறைவிடம் |
| சரத்து 25 | நீதிக்கான தடை |
| சரத்து 26 | சட்டரீதியான நபர்களின் பொறுப்பு |
| சரத்து 27 | பங்குபற்றுதலும் முயற்சியும் |
| சரத்து 28 | குற்றத்திக்கு காரணமான அறிவு,குறிக்கோள் நோக்கம் |
| சரத்து 29 | வரையறையான சட்டங்கள் |
| சரத்து 30 | வழக்கு நீதிமன்றம் அனுமதி |
| சரத்து 31 | முடக்கம்,இடைநிறுத்தல் ,அபகரித்தல் |
| சரத்து 32 | சாட்சி,நிபுணர் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு |
| சரத்து 33 | அறிக்கையிடுவோரின் பாதுகாப்பு |
| சரத்து 34 | ஊழலின் பின் விளைவுகள் |
| சரத்து 35 | சேதத்திற்கான நஷ்டஈடு |
| சரத்து 36 | விசேட அதிகாரங்கள் |
| சரத்து 37 | சட்ட அமுலாக்க அதிகாரங்களோடு ஒத்துழைத்தல் |
| சரத்து 38 | தேசிய அதிகாரங்களுக்கிடையிலான  ஒத்துழைத்தல் |
| சரத்து 39 | தேசிய அதிகாரங்களுக்கும்  தனியார் துறைக்கும் இடையிலான ஒத்துழைத்தல் |
| சரத்து 40 | வங்கி இரகசியம் |
| சரத்து 41 | குற்ற அறிக்கை |
| சரத்து 42 | நீதிமன்றம் |

**5. பாகம் 5 சர்வதேச ஒத்துழைப்பு**

| | |
|---|---|
| சரத்து 43 | சர்வதேச ஒத்துழைப்பு |
| சரத்து 44 | சரணடைதல் |
| சரத்து 45 | தண்டனை கொடுக்கப்பட்ட நபர்களை மாற்றுதல் |
| சரத்து 46 | பரஸ்பர சட்ட ஒத்தாசை |
| சரத்து47 | குற்றவியல் வழக்குகளை மாற்றுதல் |
| சரத்து 48 | சட்ட அமுலாக்க ஒத்தாசை |

சரத்து 49 கூட்டான விசாரைணைகள்
சரத்து 50 விசேட விசாரணைப் பொறிமுறைகள்

**6. பாகம் V சொத்து மீட்பு**

சரத்து 51 பொதுவான ஏற்பாடு
சரத்து 52 குற்றவியல் நடைமுறைகள் தொடர்பிலான மாற்றங்களை கண்டறிதலும் தடுத்தலும்
சரத்து53 நேரடியான சொத்து மீட்பு அளவீடுகள்
சரத்து54 சர்வதேச அபகரித்தல் ஒத்தாசையுடனான சொத்து மீட்பு பொறிமுறைகள்
சரத்து55 நோக்கத்தோடான அபகரித்தலுக்கான சர்வதேச ஒத்தாசை
சரத்து56 விசேட ஒத்தாசை
சரத்து57 சொத்து திருப்பலும் அழித்தலும்
சரத்து58 நிதி புலனாய்வு பிரிவு
சரத்து59 இருபக்க மற்றும் பல பக்க உடன்படிக்கைகளை ஏற்பாடுகளும்

**7. பாகம் VI தொழில்நுட்ப உதவியும் தகவல் பரிமாற்றமும்**

சரத்து 60 பயிற்சியும் தொழில்நுட்ப உதவியும்
சரத்து 61 ஊழல் தொடர்பிலான தகவல் திரட்டல் ஆய்வு மற்றும் பரிமாற்றம்
சரத்து 62 வேறு அளவீடுகள்: பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழிநுட்ப உதவி மூலம் மாநாட்டினை நடைமுறைப்படுத்தல்

**8. பாகம் VII நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகள்**

சரத்து 63 மாநாட்டிற்கான அரச பங்காளிகளுக்கான கருத்தரங்கு
சரத்து64 செயலகம்

**9. பாகம் VIII இறுதி ஏற்பாடுகள்**

சரத்து 65 மாநாட்டின் நடைமுறைப்படுத்தல்
சரத்து 66 வேறுபாடுகளின் தீர்வு
சரத்து 67 கையொப்பம்,ஒப்புதல்,ஏற்றுக்கொள்ளல், அனுமதி,மற்றும் இணக்கம்
சரத்து 68 நடைமுறைக்கு கொண்டுவருதல்
சரத்து 69 திருத்தங்கள்
சரத்து 70 துறத்தல்
சரத்து 71 வைப்பும் மொழியாக்கமும்

இதற்கமைய ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டினை நடைமுறைப்படுத்துவத்தினை எளிதாக்கும் முகமாக சீன அரசாங்கத்தின் ஆதரவோடும் UNDOC ன் ஒத்துழைப்போடும் ஊழலிற்கெதிரான சர்வதேச அதிகார கூட்டமைப்பு (IAACA) அக்டோபர் 2006ல் உருவாக்கப்பட்டது. நூலாசிரியர் IAACA வின் 2006ம் ஆண்டு உருவாக்கத்தின் போது தனி உறுப்பினராக இருந்து தற்போது அதன் ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

IAACA

எனவே இந்த புத்தகமானது ஐ.நாவின் ஊழிற்கெதிரான மாநாட்டினை நடைமுறைப்படுத்துவதனை எளிமையாக்கும்படிக்காக IAACA கடந்த வருடங்களில் எடுத்த முயற்சிகளை வெளிப்படுத்துகின்றது. பல நாடுகளில் இடம்பெற்ற IAACA வின் வருடாந்த மாநாடுகளுக்கப்பால், ஊழல் மற்றும் மோசடிக்கு எதிராக செயற்படுவோரை பயிற்றுவிக்கும் முகமாக கிரமமான கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பனவும் நடாத்தப்பட்டுள்ளன. IAACAவிற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிக்கும்படிக்கான 30 நபர்களை கொண்ட குழுவில் நூலாசிரியரும் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை தொடர்பில் பங்காளி நாடுகளுடன் ஐ.நா. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கருத்தரங்குகளை நடாத்தி தேவையான மேம்பாடுகளை மேற்கொள்கிறது. அண்மையில் ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் சரத்துகளுக்கமைய அவற்றின் கடைபிடிப்பு  மற்றும் நடைமுறை தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் இன்னுமொரு நாட்டினால் மீளாய்வு செய்யப்படும்படியான “மீளாய்வு பொறிமுறை” ஒன்று உள்வாங்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் மேம்பாட்டிற்கும் வலுப்படுத்தலுக்கும் முன் மொழிவுகளை மேக்கொள்ளும் வகையில் IAACA ஆனது பங்காளியான அரசுகளினது கருத்தரங்கில் பார்வையாளராக அந்தஸ்து பெற்றுள்ளது.

தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தும் ஊழல் மற்றும் மோசடிக்கெதிராக செயற்பட்டதன் மூலம், தான் எதிர் நோக்கிய சவால்களிலிருந்தும் "பொருளாதார பயங்கரவாதம்" என அவர் குறிப்பிடும் எதிர்க்கப்படவேண்டியதிலிருந்து, தவறும் பட்சத்தில் இந்த பொருளாதார பயங்கரவாதம் ஆயுத பயங்கரவாதத்திற்கு வழி வகுத்திருப்பத்தினையும் அதனது வளர்ச்சியை தற்கால உலகில் காணக்கூடியதாக இருப்பதனையும் நூலாசிரியர் இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது இன்னுமொரு சிறப்பம்சமாகும்

ஊழல் மற்றும் மோசடிக்கு எதிராக போராடும் நூலாசிரியரின் அடிப்படை இலங்கையில் காணப்படும் பௌத்த தர்மத்தின் நிமித்தம் உருவான ஒன்றாகும், விசேடமாக இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கி.மு. 543 இற்கு முன்னதான  மகாவம்ச சரித்திரத்தில், கி.மு.3ம் நூற்றாண்டில் அரஹத் மஹிந்த தேவநம்பிய திஸ்ஸ அரசனுக்கு ஆற்றிய போதனையில், நாட்டின் வளங்கள் மக்களுக்கு சொந்தமானது எனவும் மக்கள் சார்பில் அதனுடைய காப்பாளனாக அரசன் இருப்பதாகவும் அரசன் அந்த அடிப்படையில் வளங்களை ஆள வேண்டும் எனவும் குறிப்பிட்டதாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.


மேலும் நூலாசிரியர் தனது சொந்த உண்மையான அனுபவத்திலிருந்து பொது மக்களின் நிதியினை எவ்வாறு சர்வதேச மதிப்பு மிக்க நிதி நிறுவனங்கள், வங்கிகள், மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகள் என்பன பரிமாற்றம் செய்துகொண்டன என்பதனையும், பொது மக்களின் நிதி தொடர்பில் எவ்வித கணக்கொப்புவித்தலுமின்றி கொள்ளையடித்து அதனை சூறையாடியதனையும் வெளிக்காட்டியுள்ளார்.

இந்த புத்தகத்தின் இன்னுமொரு அத்தியாயத்தில் தான் விசாரணை நடாத்தி ஆராய்ச்சி செய்த ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான தகவல்களை அறிவு சேர்க்கும் முகமாக மிக விளாவாரியாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார், இவை உலகளாவிய மட்டத்தில் ஊழல் மற்றும் மோசடி போன்ற புற்றுநோயினை வெளிக்காட்டி அதற்கு எதிராக போராடுவதற்கான தேவையை வலியுறுத்தும் முகமாக ஊடகங்களிலும் பிரசுரமாகியிருந்தன,மேலும் இவை ஊழல் மற்றும் மோசடி தொடரில் செயற்படுபவர்களுக்கு மிக முக்கியமான விலை மதிப்பற்ற அறிவை கொடுப்பனவாகவும் அமைகிறது. ஆதாரம்


| | | |
|---|---|---|
| வெளிப்பாடு 1 | - | ஊழலும் அரசியலும் |
| வெளிப்பாடு 2 | - | எல்லா இடங்களிலும் ஊழல் |
| வெளிப்பாடு 3 | - | ஊழலிற்கெதிராக நீதியை தேடல் |
| வெளிப்பாடு 4 | - | ஊழலை மூடி மறைத்தல் |
| வெளிப்பாடு 5 | - | ஊழலும் சொல்லாட்ட்சியும் |
| வெளிப்பாடு 6 | - | ஊழலின் மறைவிடங்கள் |
| வெளிப்பாடு 7 | - | ஊழலும் சட்டமும் |
| வெளிப்பாடு 8 | - | ஊழலின் பிணைந்த சாத்தான்கள் |

| | | |
|---|---|---|
| வெளிப்பாடு 9 | - | ஊழல் மீதான தீர்வு |
| வெளிப்பாடு 10 | - | ஊழல் மீதான இராஜதந்திர வெளிப்பாடு |
| வெளிப்பாடு 11 | - | தனியார் துறை ஊழல் |
| வெளிப்பாடு 12 | - | ஊழலின் எடுபிடிகள் |
| வெளிப்பாடு 13 | - | ஊழலும் முரண்பாடுகளும் |
| வெளிப்பாடு 14 | - | ஊழலும் கொள்கைகளும் |
| வெளிப்பாடு 15 | - | ஊழலின் ஆணைக்குழு |
| வெளிப்பாடு 16 | - | ஊழலின் ஒப்பந்தங்கள் |
| வெளிப்பாடு17 | - | ஊழல் மீதான நடவடிக்கை |
| வெளிப்பாடு18 | - | ஊழலிலிருந்து எதிர்ப்பு சக்தி |
| வெளிப்பாடு 19 | - | ஊழலின் இரட்டை வடிவம் |
| வெளிப்பாடு 20 | - | ஊழல் தொடர்பில் SAARC ன் பாராமுகம் |
| வெளிப்பாடு 21 | - | SAARAC ஊழலை அனுமதிக்கின்றது |
| வெளிப்பாடு 22 | - | ஊழல் மீது வெளிச்சத்தினை செலுத்துங்கள் |

அதிர்ச்சியூட்டும் வகையிலான வேலைப்பாடு என்னவெனில், ஐக்கிய நாடுகளும் சர்வதேச சமூகமும் ஊழல் மீதான கடுமையான சொல்லாட்சியையும், அறிவுரையையும் கண்டனத்தையும் காட்டுகின்ற அதேவேளை,நூலாசிரியர் தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து ஆவணங்களுடனான ஆதாரத்துடன் எவ்வாறு உலக வங்கியும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் ஊழலுக்கெதிரான போராட்டத்தில் வெறும் சொல்லாட்சிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டன என்பதனையும், யதார்த்தத்தில் அவர்கள் ஊழல் மோசடிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்க தவறியமையையும்/நடவடிக்கை எடுக்க தயங்கியமையையும் வெளிப்படையாக காட்டியுள்ளார். அதைப்போன்றே இலங்கை அரசும் அதே யதார்த்தத்தைத்தினை பின்பற்றியிருந்தமையை நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.



**மொரோக்கோவில் அக்டோபர் 2011ல் இடம்பெற்ற ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் அங்கத்துவ நாடுகளின் ஆய்வரங்கில் இலங்கையின் கவலைக்கிடமான வெற்றிடம்**




**ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாடு:**

# இலங்கை தவறியுள்ளதா ?

ஊழல் மோசடிக்கு எதிராக உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இந்நூலானது விளக்கமாகவும், உண்மையாகவும் வெளிக்காட்டுவதோடு, ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் பங்காளி நாடுகளின் பொறுப்பினை வலியுறுத்துவதோடு,ஐ.நாவின் ஊழலிற்கெதிரான மாநாட்டின் சரத்துகளுக்கு அமைய ஊழல் மோசடியினை தடுப்பதற்கான சட்டங்களைஅவர்கள் உருவாக்க வேண்டிய தேவையை காட்டுவதுடன்,அதன் மூலம் ஊழல் மோசடிக்கெதிரான விசாரணைகளை மேற்கொண்டு வழக்குகளை தொடுப்பதற்கு அரசியல் அர்ப்பணிப்புடன் அமைப்புகளின் ஆளுமையையும் இயலுமையையும் விருத்தி செய்ய வேண்டிய தேவையையும் காட்டுகின்றது: ஆகவே இந்நூலானது அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடும் எவருக்கும் விலைமதிக்க முடியாத ஒரு பொக்கிஷமாகும்.